மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.135/2016

வாக்குமூலம். வா.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பிரமணியன் | ஜாதி | |
| த/பெ. | சாத்தன் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 58 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 26.07.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இதற்கு முன்னால் நீதிமன்றத்திற்கு பலமுறை வந்திருக்கிறேனா என்றால் வந்திருக்கிறேன். வாதி ராஜாமணி பத்திரம் எழுதிக் கொடுத்ததை நேரடியாக பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன் ராஜாமணி உதவிக்காகத்தான் எழுதிக் கொடுத்தார். பத்திரத்தை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் அறந்தாங்கி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த பிறகு என்னிடம் காண்பித்தார்கள். பதிவு செய்த அன்றே பத்திரத்தை பார்த்தேனா என்றால் இரண்டு மாதம் கழித்து நகல் போட்டு காண்பித்தார்கள். என்னிடம் ஏன் பத்திரத்தை காண்பித்தார்கள் என்றால் உதவிக்காக சென்றதாகவும், பத்திரம் பதிவு செய்துவிட்டதாகவும் என்னிடம் சொன்னார். யாருக்காக உதவிக்காக சென்றதாக கூறினார் என்றால் 1-ம் பிரதிவாதி அசோக்குக்கு உதவியாக சென்றதாக கூறினார்.

2) பத்திரத்தில் யார் கிரையம் வாங்கியதாக காணப்பட்டது என்றால் 2-ம் பிரதிவாதி குருஜலா ஜெயராமையா கிரையம் வாங்கியதாக காணப்பட்டது. நான் மேற்படி கிரைய ஆவணத்தை படித்துப் பார்த்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டிய ஆவணம் அசல் ஆவணமா சான்றிட்ட நகலா என்றால் சான்றிட்ட நகல் ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் மேற்படி ஆவணமா என்றால் என்னிடம் வா.சா.ஆ.1-ன் ஜெராக்ஸ் நகலை காண்பித்தார். மேற்படி கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை எடுக்கும்போது வாதி என்னை அழைத்து சென்றாரா என்றால் இல்லை. அவர் சான்றிட்ட நகல் பெற்று வந்துதான் என்னிடம் காண்பித்தார். வாதிக்கு யார் சான்றிட்ட நகல் பெற உதவி செய்தது என்றால் யாரும் உதவி செய்யவில்லை. வாதியாகத்தான் சான்றிட்ட நகல் பெற்றார். என்னிடம் ஒளிநகலை காட்டும்போது வாதி பதிவு நகலை கைவசம் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். நான் மேற்படி பதிவு நகலையும், ஒளி நகலையும் ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் இல்லை. ஒளி நகலை படித்துப் பார்த்தேன். அதில் தெலுங்கானா

மாநிலத்தை சேர்ந்த கரிம்நகர் மாவட்டம், கரிம்நகர் டிவுன், வாவில்லா பள்ளி கிராமத்தில் வசித்து வரும் குருஜாலா திருபாலையா மகன் குருஜாலா ஜெயராமையா என்று எழுதப்பட்டிருந்து என்றால் சரிதான்.

3) மேற்படி குருஜாலா ஜெயராமையாவை எனக்கு தெரியுமா என்றால் நான் அவரை பார்த்ததில்லை. ராஜாமணி எழுதிக்கொடுத்த பத்திரத்தின் அசல் யாரிடம் இருக்கும் என்றால் கிரையம் வாங்கியவரிடம் இருக்கும். எனக்கு கிரையப்பத்திரத்திற்கும், கடன்பத்திரத்துக்கும் உள்ள வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வாதியும் 1-ம் பிரதிவாயும் நெருங்கிய அறிமுகம் உள்ளவர்கள் என்றால் சரிதான். எனக்கும், 1-ம் பிரதிவாதி அறிமுகமானவர் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி அசோக் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் வியாபாரம் செய்து வந்தார் தற்போது நொடித்துவிட்டார். வாதியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 30 வருடமாக தெரியும். அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். தாவா சொத்து ஆதியில் வாதிக்கு சொந்தமான சொத்தாக இருந்தது என்றால் சரிதான். வாதிக்கு ஆங்கில மொழி தெரியும் என்றால் சரியல்ல. தமிழ்தான் தெரியும்.

4) வாதி ராஜாமணி கையெழுத்து எந்த மொழியில் போடுவார் என்றால் தமிழில் தான் போடுவார். வாதியின் கணவரின் கையெழுத்து தெரியும் என்றால் சரிதான். அவர் ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவார். வாதியின் கணவர் பெயர் சண்முகசுந்தரம் ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் காணப்படும் கையெழுத்துக்களில் ராஜாமணியின் கையெழுத்து இருக்கிறதா என்றால் இருக்கிறது. புகைப்படத்துடன் ஒட்டப்பட்டு ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார் என்றாலும், ரேகை வைத்திருக்கிறார் என்றாலும் சரிதான். மேற்படி கையெழுத்தும், ரேகையும் பி.வா.சா.ஆ.3 வரிசையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து நாளது தேதிவரை ராஜாமணியின் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் தற்போத சென்னையில் இருக்கிறார். வாதியின் கணவர் சென்னையில் தொழில் செய்கிறாரா என்றால் அங்கு அவர் தையல் வேலை பார்க்கிறார். அடிக்கடி ஊருக்கு வந்து வாதியுடன் தங்கியிருப்பார் என்றால் சரிதான்.

5) 1-ம் பிரதிவாதி அசோக்கின் இக்கட்டான சூழ்நிலையை கருத்தில்கொண்டு, அசோக் பெற்ற கடன் தொகைக்கு பாதுகாப்பிற்கு மட்டுமே கிரையப்பத்திரம் வாதி எழுதிக் கொடுத்தார் என்று என் சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும், 2-ம் பிரதிவாதிக்கும் எத்தனை வருடமாக பிரச்சனை என்றால் தாவா வழக்கிற்கு சிறிது நாட்கள் முன்னால் தான் பிரச்சனை. எதனால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் 1-ம் பிரதிவாதி அசோக்கிற்கு உதவி

செய்ய ராஜாமணியை 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியிடம் அழைத்து சென்றதால் பிரச்சனை. எனக்கு மேற்படி பிரச்சனை பற்றி எத்தனை வருடமாக தெரியும் என்றால் 4, 5 வருடங்களாக தெரியும். நான் ராஜாமணிக்கு வேண்டியவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**